உ

பாண வாழ்த்து



த்தவர் :
பதி கம்பெனி,
ன்னை-1. [பைசா. 25.

யஃனிட மர்ம சாஸ்திரம் மென்னும்

சரீர மர்ம சாஸ்திரம்

விலை ரூ. 3.00.

இதில ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், ரதி மன்மதன் சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியனவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும்; மகாரிஷிகள் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனி மேல் விவாகம் செய்து கொள்பவர்களுக்கும் இன்றியமையாத நூல் படங்களுடன் கூடியது.

உ

கடவுள் துணை

கலியாண வாழ்த்து

பிரசுரித்தவர் :
ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

விலை] [ந. பை 25

வாகீஸ்வரி அச்சகம்
சென்னை-1.
1965.

உ

கடவுள் துணை.

கலியாண வாழ்த்து

தெய்வஸ்துதி

காரானைமாமுகத்து கற்பகத்தின்தாள்போற்றி
வள்ளிதெய்வானை மணவாளன்தாள்போற்றி
பார்வதியையெங்கள் பரமனுடனேபோற்றி
தேவரெல்லாம்வாழ்த்தும் திருமால்பதம்போற்றி
செந்தாமரைவாழ்த்தும் தேவிபதம்போற்றி
கலியாணவாழ்த்து களிப்பாகயான்மொழிவேன்.

வாழ்த்து

வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள் மங்கிலியப்பெண்களே
எல்லோருங்கூடி இனிதாகவாழ்த்துங்கள்
மாப்பிள்ளையை எல்லோரும் வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
கற்புக்கனியான காரிகையைவாழ்த்துங்கள்
வேதமும்வேதியரு மேன்மையுடனேவாழ்க
பெற்றெடுத்தமாதா பெருமையுடனேவாழ்க
வளர்த்தெடுத்ததந்தை வளமையுடனேவாழ்க
உற்றாரும்பெற்றாரும் உறவினரும்வாழ்க.

விவாகச் சிறப்பு

திருவார்கலியாண சிறப்புரைக்கக்கேளுங்கள்
மாதாவும்பிதாவும் மகன்கல்விதானோக்கி
தாய்தந்தையர்மைந்தன் தன்பருவந்தானோக்கி
கலியாணஞ்செய்து கண்குளிரப்பார்ப்பதற்கு
தங்குலத்திற்கேற்ற தந்தைமொழியைப்பெற்றோர்
தங்களுடனேபேசத் தக்கோரைமுன்னனுப்பி
பேசிவந்தபின்பு பிரியமாஞ்சுற்றமுடன்
கோலம்பெறநன்னாள் குறித்தாங்கினிதேகி
தாயுந்தகப்பனுந் தங்கோத்திரம்பேசி
பாட்டனுறவும் படிப்படியாயாராய்ந்து
சாதிகுலங்கள் சதுராகத்தாம்பேசி
புத்திரரைப்பெற்றவரும் புத்திரிநல்லம்மானும்
கன்னியுடன்தந்தையருங் களிப்பாகச்சம்மதித்து

பொருத்தம் பார்க்கப் புரோகிதரை வரவழைத்தல்

பஞ்சாங்கம் சொல்லுகின்ற பார்ப்பாரை தாமழைத்து, பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பொருத்தங்கள் பாருமென்றார், பெண்ணின் பேரைகேட்டுப் பிராமணர்களெண்ணலுற்றார், மாப்பிள்ளை பேர்கேட்டு வகைவகையாய்க் குறித்தவரும், நட்சத்திரங்கள் நலமாயிருவருக்கும், ஆராய்ந்து

பார்த்து அப்போது வேதியர்கள், மன்னுந்தின பொருத்தம் வாய்ந்த கனப்பொருத்தம், மகேந்திரப்பொருத்தம் மருவுதீர்க்கப் பொருத்தம், சின்னபொருத்தம் சிறந்த ராசிப்பொருத்தம், அதிபதி தன்பொருத்தம் ஆமைவசியப் பொருத்தம், இராசிபொருத்தம் இனியவேகப் பொருத்தம்.

உத்தமங்களாறும் ஒருபத்துமுத்துந்தான்
வயிற்றுப்பொருத்தமும் வாய்ந்ததுகாண்மங்கையற்கு
பழநழுவிப்பாலில் விழுந்தபழமொழிபோல்
மங்கையிளங்கொடிக்கு வகையாகவாய்த்ததுகாண்
என்றவர்கள்சொல்ல யாவர்களுந்தான்கேட்டு
இதுபோதுமென்று இனிதாயெழுந்திருந்து

பரிய உடன்படிக்கை

பரியமிடவேண்டுமென்று பண்பாகத்தாம்பேசி
வரிசையுடன்பேழை வகையாகத்தானெடுத்து
முப்பதுதட்டிலே முனைபாக்குவெற்றிலையும்
நாற்பதுதட்டிலே நலமஞ்சள்தேங்காயும்
ஐம்பதுதட்டிலே ஆபரணவாடைகளும்
வாழைகதலிமாம்பழமும் வருக்கைபலாப்பழமும்
முப்பழமுங்கொண்டு முகூர்த்தநாளேற்படுத்தி

எட்டுதிசையறிய இயல்புடனேவந்தார்காண்
வாழ்கன்னிகைமனையில் வந்தேபுகுந்தார்கள்
பெண்ணைப்பெற்றோர்கண்டு பிரியமுடனேவந்து
வாருங்களென்று வணக்கமாய்த்தானழைத்து
செங்கையாலேதழுவிச் சேர்ந்துறவுதாமாடிப்
பட்டுப்பாய்போட்டு பருத்ததிண்டுதான்போட்டு
உட்காருமென்று உபசாரஞ்செய்தார்கள்
மைந்தருறவாரும் மங்கையிடதந்தையரும்
பேசியிருந்தார்காண் பிரியமாயெல்லோரும்
வேதியரைத்தாமழைத்து விவாகத்திற்கோர்நாளை
பாருங்களென்று பந்துக்கள்தான்சொல்ல

முகூர்த்த நிச்சயம்

சித்திரைமாதத்திலே சிறந்தவிருபதாந்தேதி
சுக்கிரவாரந்துதியை திதிசதுர்த்திதிதி
நட்சத்திரம்வச்ர நாமயோகங்கரணம்
பத்திரையென்ன பகர்ந்தசுத்தபஞ்சாங்கம்
சுபதினத்திற்பானு தோன்றியைந்துநாழிகை
மேல்பத்துநாழிகைக்குள் மிதுனமாம்லக்கினத்திற்கு
சுபமுகூர்த்தமாமென்று கலஸ்தலிசிதந்தந்து
நிச்சயதாம்பூலம் நேர்நேராய்மாற்றிக்கொண்டு

பிள்ளைவீட்டுக்காரர் பெண்ணுக்குகொண்டுவந்த
மஞ்சளும்தேங்காயும் வாழைப்பழவகையும்
தாம்பூலமுமந்த தையலர்க்குந்தான்கொடுத்து
பொன்னாபரணமும் பூவுந்தரித்தார்கள்
பந்துக்களெல்லோரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகைமாரெல்லோருங் கண்டுமனமகிழ்ந்தார்
வந்தவர்களெல்லோருக்கும் வழங்கினார்தாம்பூலம்
போஜனமுஞ்செய்வித்தார் பொற்கொடியைபெற்றோர்
பின்புகட்டணந்தான் பெரியகனத்தார்க்களித்து
ஐந்தாங்காலென்று அறிவித்தார்யாவருக்கும்
தட்டானைதானழைத்து தாலியமைக்கச்சொன்னார்
மங்கலக்கூறை வழக்கம்போல்வாங்கிவைத்து
பட்டணத்திலுள்ள பங்கின்கங்காளிகட்கும்
ஊர்களிலுள்ள உறவின்முறையார்க்கும்
இஷ்டசினேகிதர்க்கும் இன்னமற்றசாதிகட்கும்
வெள்ளைவெத்திலைபாக்கும் விவாகவிளம்பரமும்
அன்பாயனுப்பிவைத்து அனைவரையுந்தாமழைத்தார்
கன்னிக்கலங்கரித்து கலியாணஞ்சொல்லிவைத்தார்
மாப்பிள்ளைக்கும்பெண்ணும் மாமன்மைத்துனன்
முதலோர் வீட்டிற்கழைத்து விருந்தினிதாகசெய்வித்து
ஆடைகொடுத்து அம்மன்கோலங்காட்டி

வேடிக்கையாயவர்கள் வீட்டினிற்கனுப்பினர்காண்
தங்களிஷ்டதேவதைக்கு தகுந்தபடிசெய்தார்

பெண் வீட்டுப் பந்தல் சிறப்பு

பந்தல்பெருமைதனைப் பகருகிறேன்கேளுங்கள்
பந்தலென்றால்பந்தலிது பார்த்தீர்பந்தலிலே
முத்தாரந்தூக்கி முழுவயிரக்கால்நிறுத்தி
பட்டாலலங்கரித்து பவளவாரைப்பரப்பி
ஆணிப்பொன்னாலே அணியணியாய்க்கால்நாட்டி
மாணிக்கக்கால்மேலே மரகதத்தால்பந்தலிட்டு
மாணிக்கங்கோத்த மரகதமணித்தோரணமும்
வாழைகளுஞ்சோலைகளும் வான்கமுகுதான்நாட்டி
முத்துச்சரங்கொண்டு முகமெல்லாந்தூக்கிவிட்டு
பவளச்சரத்தாலே பக்கம்பரவடைத்தார்
மாணிக்கப்பொற்பதுமை மயில்விசிறிகொண்டுநிற்க
தென்றலசைந்துவர தெருக்களலங்கரித்தார்
ஈழப்பலாக்காய்கள் இருபுரமுந்தூக்கிவிட்டார்
கோடிக்குகோடி குத்துவிளக்கெரிய
இப்படிக்குப்பந்தல் இட்டார்களேந்திழைக்கு
வண்ணமுள்ளபாய்விரித்தார் வந்தவர்கள்தாமிருக்க

பிள்ளை வீட்டுப் பந்தல் சிறப்பு

மாப்பிள்ளைவீட்டுப்பந்தல் வண்மைகளுங்கேளுங்கள்
பிள்ளைவீட்டுப்பந்தல் பெருமைதனைகேளுங்கள்
அப்பந்தலைப்பார்க்க ஆயிரங்கண் தான்வேண்டும்
கோலப்பந்தலைக்காணக் கோடிக்கண் தான்வேண்டும்
தேவேந்திரனிருக்கும் சித்திரமணிமண்டபமும்
குபேரன்தான்வீற்றிருக்கும் கோலமணிமண்டபமும்
இந்தமணப்பந்தலுக்கு ஈடாகமாட்டாது
நல்லதினம்பார்த்து நட்டப்பந்தற்கால்களிலே
ஒருகாலுனக்குந்தான் ஒப்பாகமாட்டாது
சதுர்ப்பந்தல்போட்ட சமர்த்தனைப்பாருங்கள்
தேவதச்சன்தானே தெரிந்துவமைத்தானே
அமரர்தச்சன்தானே அலங்கரித்துவைத்தானே
மேலெங்கும்வஸ்திரங்கள் வேடிக்கையாய்கட்டி
சாலர்கள்கட்டி சரிகைப்பூவுஞ்சேர்த்து
சுற்றிலுஞ்சித்திரங்கள் சொகுசாகத்தானமைத்து
வண்ணமுள்ளகண்ணாடி வகைய்யாயலங்கரித்து
பளிங்குமணிக்கோவை பளபளெனவேயொளிர
பச்சைகுளோப்புகள் பக்கத்திலேயொளிர
சந்திரனபோல்நிலைக்கண்ணாடிகளுந்தான்விளங்க
இவ்வகையாய்ப்பந்தலிலே எங்கெங்குந்தீபங்கள்

மாணிக்கத்தாலே வகைவகையாய்வைத்தார்கள்
இந்தவகையாக இட்டமணப்பந்தலிலே
வந்தவர்களெல்லா மகிழ்வுடனே தாமிருக்க

உப நயனம்

முகூர்த்ததினத்திற்கு முன்னம்நாள்மாப்பிள்ளை
காலோசிதமெனுங் கருமங்கள்தான்செய்து
நெல்லைப்பரப்பி நிலத்தில்மனையிட்டு
பிள்ளையதின்மீது ஏறியுட்கார
அமிர்தகலசத்தால் அம்பட்டன்தான்க்ஷவரம்
செய்தபின்பிள்ளை சிரகத்தான்முழுகி
வேஷ்டியுடுத்தி மேலாடையுந்தரித்து
நெற்றியிலவதார நீறணிந்துபொட்டுமிட்டு
பாகைதரித்துமணப் பலகையிலுட்காரவைத்து
கமலஞ்சேர்மாதர்கள் வருகையால்நலங்கிடவே
பின்பிள்ளைஸ்நானம் பெருமையாய்த்தான்செய்து
அனுஷ்டானஞ்செய்தவுட னவஞோடிவந்துமேதான்
பட்டுவஸ்திரமுடித்து பட்டுகுல்லாபோட்டு
பட்டுவுத்தரியத்தை பட்டையட்டையாய்மடித்து
மேலேதரித்தவுடன் வேதியர்கள்தாமழைத்து
உபநயத்துக்குள்ள ஒழுங்கெல்லாந்தானடத்தி

பிள்ளைபிணங்கி பிரமசாமியாக
எல்லோரும்பார்க்கப் பரதேசம்தான்போனான்
மாமனார்கண்டு மருமகன்பின்னேசென்று
பரதேசமேன்போறீர் பண்பானவென்னுடைய
கன்னிகையையின்று கன்னிகாதானமாய்
தருவேனெனச்சொல்லி தாமழைத்துவந்தார்காண்

மணக்கோலம்

அங்கிருந்துதோழன் அரண்மனையினுட்புகுந்து
காரேக்கென்னாத் தயங்குகிஜார்பூட்டி
அங்கிதரித்தார் நேரானமாப்பிள்ளைக்கு
அமரிதரித்தார் அழகானமாப்பிள்ளைக்கு
பாகைமேற்றிரிபோல் பண்பாய்த்துராதரித்தார்
வச்சிரக்கற்கடுக்கன் வயங்கும்பிரபைக்கடுக்கன்
பச்சைமுருகுகாதில் பாங்காயலங்கரித்து
மாரிற்பதக்கம் மணிப்பதக்கந்தான்தரித்தார்
உத்திரசங்கம் ஒளிசெகதாடுதரித்தார்
ஐந்துவிரல்களுக்கும் அழகானமோதிரங்கள்
கைகளுக்குத்தோடா காப்புகளுந்தரித்தார்
புஜத்தோடுபாஜிபந்து பூணத்தரித்தார்கள்
காற்காலிமேலே நலமாயிருக்கவைத்து

குதிரையழைபுமென்றார் கொற்றவனார்தானேற
ஆயிரங்குதிரையிலே அதிலேயொருநற்குதிரை
நீரூட்டிகுதிரைக்கு நெருங்கப்பணிபூட்டி
கொண்டைக்குச்சுட்டிகட்டி குவளைக்குமையெழுதி
நெற்றிக்குச்சுட்டிக்கட்டி நேராகமையெழுதி
முதுகுக்கழகாக முரசுபணிபூண்டு
நாலுவண்டயமும் நன்றாயலங்கரித்து
குதிரைவந்துதென்று கும்பிட்டுதான்சொன்னான்
ஐயாகுதிரை அடியேனுங்கொண்டுவந்தேன்
என்றுசொல்லிப்பாக னிடைந்திருந்தானப்போது
ஏறினார்மாப்பிள்ளைக்கு எடுத்தார்கள்நல்விருது
இளமன்னர்தம்பிமார் இணைக்குதிரையேறினார்
பட்டுக்குடையாம் பவளநெடுங்குடையாம்
முத்துக்குடையாம் முழுவயிரபொற்குடையாம்
தங்கக்குடையாந் தனஞ்செயற்குபொற்குடையாம்
வெள்ளிகுடையாம் வேணலக்ஷம்பொற்குடையாம்
எடுத்துநிறுத்தினார் எட்டுலட்சம்பொற்குடைகள்
வெண்சாமரைவீசு விருதுபலமுழங்க
ஆனைநெருங்கி அணியொட்டகங்கள்வர
குதிரைநெருங்கிவர கோடிமன்னர்சூழ்ந்துவர
வித்துவான்கள்பாடிவர விருதுபலமுழங்க

நட்டுவர்கள்பாடிவர நாதசுரமூதிவர
எக்காளைசின்னங்கள் எங்குமுழங்கிவர
கைத்தாளம்கொட்ட கன்னியர்கள்நின்றாட
பக்கங்குதிரைகளும் பாங்காகச்சூழ்ந்துவர
கொம்புகலைவீணை கொக்கரித்துஆர்ப்பரிக்க
வச்சிரத்தால்சீராக்கள் வயிரத்தாலம்பாரி
ஆனைநெருங்கிவர அணியணியாய்கட்டிவர
தம்பூறுதான்கொட்டத் தவளச்சங்குதான்முழங்க
கன்செட்டுவாத்தியங்கள் கணமாகத்தான்முழங்க
தப்பட்டைஓசையுந் தாளந்தொனிகேட்டு
கொம்புத்தொனிகேட்டு கொச்சிமன்னரோடிவந்து
பேரிகையானையின்பேரில் பேராழிபோல்முழங்க
வீதிக்குவீதி விவாகமணிமுரசாம்
பச்சைக்குதிரைகளும் பாங்காய்வரிசைநிற்கக்
கொஞ்சிக்குதிரைமேல் கோடிமன்னரேறிவர
இளவயதுடையபெண்கள் இருநூறுலட்சமுண்டு
கன்னிமாரெல்லோரும் கைகலந்துநின்றுவர
வாரியெரிவார்கள் வாகுலட்சம்மோஹராக்கள்
சாமரைவீசிவரும் தாதிமார்லட்சமுண்டு
சின்னங்களூதும் சிறுபெண்கள்கோடியுண்டு
மன்னன்வருகின்ற மணக்கோலந்தான்கண்டு

எறினாரானை எடுத்தார்நெடுங்குடைகள்
வீசினார்சாமரைகள் விளங்கும்பெருந்தெருவில்
பதினெட்டுவாத்தியங்கள் பாங்காய்முழங்கிவர
ஆரங்கழற்றி அலங்கரித்தார்மாப்பிள்ளையை
மாணிக்கக்குல்லாய் மன்னவர்க்குத்தானுடுத்தி
மஞ்சள்பட்டுவேஷ்டி மாப்பிள்ளைக்குத்தானுடுத்தி
அழகுமணிகொண் டலங்கரித்தார்மாப்பிள்ளையை
கிழக்குமுகமாகக் கீர்த்தியுடன்வீற்றிருந்தான்
நாயகியைச்சோடித்து நாயகன்பக்கத்தில்வைத்து
கொட்டால்முழக்கிவிட்டு கூறினார்பலவிருது
பேரிகைகொட்ட பெருமுரசுநின்றார்ப்ப
கச்சரிகொட்ட டமாரத்தொனிமுழங்க
வேதப்பிராமணர்கள் வேதியர்கள்சூழ்ந்திருக்க
சாதிப்பிராமணர்கள் சாஸ்திரிகள்சூழ்ந்திருக்க
அம்மிவடபாலிருக்க அரசாணிமுன்னிருக்க
குழவிவடபாலிருக்க கூறைகள்முன்னிருக்க
சாலுங்கரகமுச் சந்திரருமுன்பாக
பச்சைமணைப்போட்டுப் பாலிகைகள் தான்பரப்பி
கோதுமைமொச்சை கொள்ளுவுளுந்து
செந்நெல்பயறு செந்துவரைப்பார்க்கடலை
முதல்நவதானியமு முன்னுறவைத்ததனை

கொண்டுவந்துபாலிகையில் கோலவரசாணிமுன்னே
வாரிமுளைதெளித்தார் மங்கிலியப்பெண்கள்முன்
ஆலாத்தியேந்தி ஆயிழைமார்நீங்கிநின்றார்
மைத்துனன்மாரோடிவந்து வணங்கியேகைகொடுத்தார்
மாப்பிள்ளையுங்குதிரைவிட்டு மணபந்தலிற்சேர்ந்தார்
மச்சினிமாரெல்லோரும் வாசலிலேவந்துநின்று
பூபந்துகொண்டெரிவார் பொற்பகலைவிட்டெறிந்தார்
கொற்றவரும்போய்புகுந்தார் கூறுமணவாசலில்
நாற்காலின்மீது நாயகனும்வீற்றிருந்தார்
கட்டழகிசீர்வருகைக் கண்டுமனமகிழ்ந்தார்
கண்ணேமணியே கன்னியிளங்கமுகே
தேனேமொழியாளே செம்பவளவாயாளே
முத்துவனத்தாளே முல்லைநகையாளே
சேலையுடையழகன் செங்கழுநீர்ப்பூவழகன்
மாலையுடையழகன் மல்லிகைப்பூத்தோளழகன்
அல்லிமலர்க்காவில் ஆயிழையேயுன்னுடைய
மனதுக்கிசைந்த மணவாளன்வந்தான்காண்
புன்னைமலர்க்காவில் பூங்கொடியையொத்தமின்னே
மார்புக்கிசைந்த மணவாளன்வந்தான்காண்
வையகத்துக்குள்ளே வளம்பெரியநாட்டான்காண்

முகூர்த்தச் சிறப்பு

அங்கிகழற்றி அழகுபணிதிருத்தி
சுற்றிநிறைந்தார்கள் சூரியனைக்காணாமல்
சித்திரவீதி சிறப்பாய்நடந்துவர
அந்தந்தவீதியிலுள்ள ஆயிழைமாரெல்லோரும்
காணப்புறப்படுங்கள் கண்படைத்தாரெல்லோரும்
இவ்விருகண்கொண்டு என்னவோமென்னால்
பதினாறுகண்கொண்டு பார்க்கப்புறப்படுங்கள்
இவரூர்காணென்பாரும் இந்திரன்காணென்பாரும்
இந்திரற்கும்சந்திரற்கும் இளையவர்காணென்பாரும்
சேரனோசோழனோ தென்னவனோவென்பாரும்
இந்நிலத்தையாளும் இராஜஸ்தானென்பாரும்
ஈரேழுலகாண்ட பார்த்திபன்காணென்பாரும்
அர்ச்சுனர்க்குமைந்தன் அபிமன்னன்காணென்பாரும்
இன்றைக்குநாளை இருந்துபோவென்பாரும்
நாளையுமத்தெருவே நாடிப்போவென்பாரும்
நானிட்டகோலம் நடுவேபோவென்பாரும்
வாரான்காண்மாப்பிள்ளை மாமனதுவீதியிலே
முத்தாலேயாலாத்தி முகத்தினுள்காண்பித்தார்
பவளத்தாலாலாத்தி பாங்காகக்காண்பித்தார்
செம்பொன்னாலாத்தி சேரவேகாண்பித்தார்

தீபமிடுவார் திருவிளக்குத்தானிடுவார்
குத்துவிளக்குகளும் குடவிளக்கும்பலவிளக்கும்
எங்குமெரிய எத்திசையுந்தான்விளங்கும்
சாஸ்திரத்தின் படியே தப்பாமலோமம்பண்ணி
ஆகமத்தின்படியே அன்பாகஓமம்பண்ணி
ஒன்றங்குறையாமல் உத்தமர்க்குத்தான்செய்து
பெண்ணுக்குச்சடங்கு பிரியமுடன்செய்தபின்பு
மாமனார்மாமியார் வணங்கியேதத்தம்பண்ணி
சந்தோஷமென்று தகப்பனார்நீர்வார்த்தார்
மங்கிலியசூத்திரத்தை மணவாளன்கைகொடுத்து
மாதின்கழுத்தில் மங்கிலியந்தரியென்றார்
தேன்மொழியைப்பார்த்து தேகம்புளகிற்று
வாங்கிமனமகிழ்ந்து மணவாளன்றான் றரித்தான்
கட்டினான்மங்கிலியம் கற்பாந்தரமும்வாழ
அப்போதுவந்தவர்க ளனைவரும்வாழ்த்தினார்கள்
மங்கிலியச்சூத்திரமும் மாதின்கழுத்தேற
சிவசிவாவென்றசொல்லி சிந்தித்தார்கோடிஜனம்
அன்னையுடன்பிறந்த அம்மானைதான்கொண்டு
பொற்பட்டந்தன்னை பொற்கொடிக்குத்தான்தரித்து
மங்கிலியப்பெண்டுகள் வகையாகமூன்றுபேர்
தீபமும்பாலிகையுஞ் சிறப்பானபொற்செம்பும்

ஏந்திழைமுன்செல்ல யினிதாய்மனமுவந்து
மாதின்விரல்பிடித்து மணவாளன்நடந்துவந்து
அம்மியின்மீதில் ஆரிழையாளைத்தூக்கிவைத்தான்
தையலுடன்பிறந்த சகோதரனள்ளியிட்ட
வெண்பொரியைத்தானும் வெகுவாகயிருவரும்
முக்காலுமேசொரிந்து மூண்டார்களோமாக்கினியில்
பொறியிட்டகைக்கும் பொன்னாழியும்பூட்டி
தாம்பூலங்கள் தந்தான்காண்மைத்துனர்க்கு
சிறப்பாகவாழவென்று சேலையிட்டாரெல்லோரும்
பொன்னரைக்குள்ளாகப் போயிருந்தாரன்னேரம்
பாலும்பழமும்தோழனுக்குத்தந்தபின்
பிள்ளையும்பெண்ணும் பிரியமாய்த்தான்புசித்தார்

தாய்மார் தன்மகளருமை கூறல்

தெய்வச்சபைநடுவே செம்பொன்மணிக்காவனத்தே
இந்தச்சபைநடுவே யெல்லாருங்கேட்டிருங்கள்
கோலவர்ணப்பந்தலிலே கூறுகிறேன்கேட்டிருங்கள்
மாதுபிறந்த மகாதவத்தைகேளுங்கள்
அன்னத்தைப்பெற்ற அருந்தவத்தைக்கேளுங்கள்
மாதாவளர்த்தருமை மகாதவத்தைக்கேளுங்கள்
பெண்ணைவளர்த்தருமை பேசுகிறேன்மன்னவரே

மாமியார்கேட்டிருங்கள் மச்சினிமார்கேட்டிருங்கள்
மலைவேங்கடத்தார்க்கு வலக்கைபயணம்வைத்து
திருத்தணிகைவேலவர்க்கு திருக்கைபயணம்வைத்து
அடியைத்தொழுது அரசுக்குநீர்வார்த்து
தொண்ணூறுநாள் துளசிக்குநீர்வார்த்து
கோயில்கள்கட்டி குளங்களுமுண்டுபண்ணி
சத்திரங்கள்கட்டி சாவடிகள்உண்டுபண்ணி
அன்னதானஞ்செய்து அருந்தபசுபண்ணி
செம்பொன்னால்வேய்ந்து சிவகங்கையுண்டுபண்ணி
பசும்பொன்னால்வேய்ந்து பலவிளக்குமேற்றினோம்
காணுதகோவிலுக்கு காணிக்கைபோகவிட்டு
எட்டாதகோவிலுக்கு எட்டிவிளக்கேற்றி
தத்துவிட்டகோவிலுக்கு தண்டாவிளக்கேற்றி
எறும்புநுழையாத வீஸ்வரனார்கோவிலுக்கு
தலையால்நுழைந்து தவசுகள்செய்தோமே
வாரங்களேழும் மகாவிரதஞ்செய்தோமே
வெந்தமாவுதின்றால் விரதங்கலையுமென்று
பச்சைமாவுதின்று பகவானைக்கைதொழுது
தும்பைமலரெடுத்து சூரியனைப்பூசைசெய்து
பைம்பொன்மலரெடுத்து பார்வதியைபூசைசெய்து
நவக்கிரகப்பூசைசெய்து நாங்கள்தவமிருந்தோம்

பச்சிலைக்கொடிபோல பாவையருமப்போது
மழைமாசுபோல்வயிற்றில் மாயமாய்தரித்தவன்காண்
எண்ணுவெழுவருக்கும் எழுதரியசேனைகட்கும்
கண்ணுகவெங்கள்க்கும் கலிதீர்த்தகற்பகங்காண்
அடியார்கள்சாலையிலே அரசாளப்பெண்பிறந்தாள்
பாண்டியபெருமான் பயின்றெடுத்தபைங்கிளிதான்
ஐந்தண்ணன்றங்கை அருங்குடியிற்பெண்பிறந்தாள்
பாஞ்சாலராஜன் பயின்றெடுத்தபைங்கிளிதான்
மண்டலங்கள்கீர்த்திபெற்ற மதிப்புடையோன்பேத்தி
தவத்தின்பெருமையினல் தையல்வந்துவாய்த்தாளே

மச்சினிமார் மாப்பிள்ளையை யேசுதல்

யானையைக்கொண்டுவந்து அரசடியிற்கட்டினலும்
குதிரையைக்கொண்டுவந்து கூடத்திற்கட்டினலும்
கோடிக்கொடுத்தாலும் கொம்பனையாள்கிடைக்காளே
பரியம்பரியமென்று பத்துலட்சமிட்டாலும்
பாவையாள்தானுடுத்தும் பட்டுவிலைகாணுது
தேன்மொழியாள்தனக்கு தின்பாக்குக்கொவ்வாது
மாதுகுளிக்கின்ற மஞ்சள்விலைகாணுது
மாதுநல்லாள்சுந்தரிக்கு மாலைவிலைகாணுது
காமாக்ஷியம்மனுக்கு காலாழிக்கொவ்வாது

மீனாட்சியம்மனுக்கு மீன்பீலிகாணாது
செல்வக்குழந்தைக்குச் சிலம்புவிலைகாணாது
கோவைச்செவ்வாயழகைக் குவலயத்திற்கண்டதில்லை
முல்லையரும்புபோல் முன்வரிசைப்பல்லழகும்
மார்பழகும்தோளழகும் வையகத்திற்கண்டதில்லை
இடையழகும்நடையழகும் எங்கையுங்கண்டதில்லை
முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கண்டதில்லை
கச்சையிறுக்கழகும் காலின்விரலழதும்
மெச்சுமிடையழகும் மேதினியிற்கண்டதில்லை
கதலித்தொடையழகும் கட்டியிடும்பட்டழகும்
தண்டைச்சிலம்பழகும் தாரணியிற்கண்டதில்லை
இப்படிக்கொத்தபெண்ணை இவ்வுலகிற்கண்டதில்லை
கெண்டைவிழிகண்ணாளைக் கேட்டுவார்கள்மெத்தப்பேர்
கூடவுடமையது கொண்டுவந்தார்சேனபேர்
யானைகுதிரைகள்மேல் அளவிலாத்தண்டுகள்மேல்
வந்துநடப்பாரும் வாசல்வழிகாப்பாரும்
கொள்ளுவோமென்றுசொல்லி கூடிவருவாரும்
இப்படியாய்வந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு
இத்தனையுந்தள்ளி யிருந்த[illegible]க்கு
பூவிற்பிறந்தவள்காண் புண்ணியஞ்செய்தவத்தால்
அரும்பிற்பிறந்தவள்காண் அருமைநீசெய்தவத்தால்

மலரிற்பிறந்தவள்காண் வருந்திநீசெய்தவத்தால்
மல்லிகைபூத்ததுகாண் மணஞ்செய்யவந்ததுகாண்
நற்காலமாச்சுதுகாண் நரிகொம்புமிதித்தீர்காண்
செண்பகப்பூமேனியாளை சேரவேகைபிடித்தீர்
மாந்தளிர்மேனியாளை மாலையிட்டுகைபிடித்தீர்
மற்றுந்தவமிருந்தீர் மங்கையரைமாலையிட
சேரத்தவமிருந்தீர் செல்வத்தைமாலையிட
அண்டிவந்துமாலையிட்ட ஆணவங்கள்போதாதோ
தீண்டாச்சிவக்கொழுந்தை தெய்வப்பசுங்கிளியை
தீண்டிவந்துமாலையிட்ட சேவகம்போதாதோ
எங்கள்பெண்ணைமாலையிட என்னதவஞ்செய்தீரோ
குங்குமத்தோள்சார்வதற்கு கோடிதவஞ்செய்தீரோ
சந்தனத்தோள்சார்வதற்கு தவங்களதுசெய்தீரோ
மாதின்விரல்பிடிக்க மகாதவஞ்செய்தீரோ
அன்னத்தைப்பிடிக்க அருந்தவஞ்செய்தீரோ
மல்லிகைப்பூமேனியாளை மாதவத்தால்கைபிடித்தீர்
பொன்னுக்குக்குறையுமுண்டு பூவிற்கீதழுமுண்டு
ஓடுகிறதண்ணீர்க்கு உள்ளேசுழலுமுண்டு
ஆலாலமுண்டவர்க்கு கண்டங்கறுப்புமுண்டு
மையேகருப்பொழிய மற்றுங்கருப்புமில்லை
சாந்தேகருப்பொழிய சற்றுங்கருப்புமில்லை

பொட்டே கருப்பொழிய பின் கருப்புமில்லைகாண்
சுந்தரியாள் மேனிக்கு சொற்சொற்றமில்லைகாண்
பிறந்தகுடிக்கு பிழையில்லாபெண் பெருமாள்
வளர்ந்தகுடிக்கு மறுவில்லாமாணிக்கம்
கரும்பிலிணையாளைக் காணவேநாள்தோறும்
காற்றையுமிங்குவிட்டீர் கருவண்டைதூதுவிட்டீர்
அண்டையிற்நிற்கும் அன்னத்தைதூதுவிட்டீர்
கூடவேநிற்கும் குயில்களைதூதுவிட்டீர்
பெண்டுகளைத்தூதுவிட்டு பேச்சுகளைத்தானறிவீர்
கூடல்விளைப்பீர் குறத்திவாய்ச்சொற்கேட்பீர்
கூடுமோகூடாதோ கோடிகுறிகேட்பீர்
கூடுமென்னசொன்னவற்கு கோடிதானங்கொடுப்பீர்
கூடாதுயென்றவரை கொல்லத்துசமெடுப்பீர்
வாடிவதங்கிருப்பீர் வாய்ச்செலவுகேட்டிடுவீர்
பொய்யென்றுசொல்லி புலம்புவீர்நித்திரையில்
மெய்யென்றுசொல்லி மெய்மறந்துகனவினில்
வஞ்சிக்கொடியாள் வரவேணுமென்றுசொல்லி
நெஞ்சிப்பாதவித்து கேளுங்களென்றுசொல்லி
எண்ணம்பலிக்கவென்று என்னதவம்பண்ணீரோ
சாலைகள்வைத்தீரோ சத்திரங்கட்டினீரோ
கங்கைக்கரைதனிலே கல்லேற்றம்போட்டீரோ

செண்பகப்பூநாயகியைதேவியென்றுபோற்றினீரோ
கந்தர்கோவிலுக்கு கனவிளக்கிட்டீரோ
இருண்டிருந்தகோவிலுக்கு எங்கும்விளக்கிட்டீரோ
எட்டாதகோவிலுக்கு எட்டிமலர்சாத்தினீரோ
கொத்தார்குழலி குளிக்குந்திரைகளெல்லாம்
கொத்தலர்ப்பூவாய் மிதந்தீரோகொற்றவரே
வண்டார்குழலி மயிராற்றும்பொய்கையெல்லாம்
மாதளம்பூவாய் மிதந்தீரோமன்னவரே
நீண்டாசிவக்கொழுந்தாம் தெய்வகுலபெண்ணரசி
வண்ணமொழிபார்த்து மயங்கித்திரிந்தீரோ
மார்பளவுகங்கையிலே வருந்திதவம்பண்ணீரோ
நீராய்தவமிருந்தால் நெடுநாளாமென்றுங்கள்
தாயார்தகப்பனார் தான்தவசுசெய்தாரோ
ஊசிசிறுத்தி ஒருகாற்றவமிருந்தீர்
கோடிதவம்புரிந்தீர் கொம்பனையைமாலையிட
ஒருகாற்றவமிருந்தீர் உத்தமியைமாலையிட
பேசாத்தவமிருந்தீர் பெண்கொடியைமாலையிட
மாப்பிள்ளைபாராமல் மயிலணையைதான்கொடுத்தோம்
ஆளழகைப்பாராம லருங்கிளியைதான்கொடுத்தோம்
ஊரூராய்திரிபவற்கு உத்தமிவாய்த்தாள்காண்
திண்ணையில்படுத்தவற்குச் செல்வமும்வந்ததுகாண்

எங்கள் திருமாது இருக்குமந்தவாசல்
வந்துபுகுந்த மனமுனக்குபோராதோ
வாசற்படிமிதிக்க மாதவங்கள்செய்தீரோ
நங்கைதனைக்கொள்ளவந்து நாகரீகமானீரோ
பேர்பெரியபாண்டியனார் பெற்றகுணரத்தினங்காண்
கோபித்திவளிருந்தால் கும்பிட்டெழுந்திருப்பீர்
சீறியவளெழுந்தாள் சேவித்தெழுந்திருப்பீர்
ஒட்டுதிண்ணைகாத்தவற்கு ஏகாந்தமுண்டாச்சு
மண்வெட்டிப்பல்லருக்கு மாமியாருண்டாச்சு
கோடாலிபல்லருக்கு கொழுந்தியாருண்டாச்சு
காடுதிரிந்தவற்கு கட்டழகியுண்டாச்சு
நாடுதிரிந்தவற்கு நாயகியுண்டாச்சு
வாழைக்கிரைக்கவந்தீர் வாழ்மயிலைகொள்ளவந்தீர்
கீரைக்கிறைக்கவந்தீர் கிளிமொழியைக்கொள்ளவந்தீர்
முந்தினவாசலிலே முன்னேரடித்தவர்காண்
பிந்தினவாசலிலே பின்னேரடித்தவர்காண்
பொன்முத்துகட்டிலிலே பூவெடுத்துமெத்தையிலே
ஒக்கக்கலந்து உயர்ந்தகுலமானீர்காண்
அரியவிருந்துவந்தால் அடுப்புமெடுத்திடுவீர்
சீரையுமாய்ந்து கொடுப்பீர்கிளிமொழிக்கு
வாழக்காய்கொய்து வழங்குவீர்பொற்கொடிக்கு

ஈரப்பலாக்காய் இருமுள்ளுதானுருவி
பெரியவிருந்துவைத்தால் பேணிகள்செய்திடுவீர்
இப்படிக்கொத்தவற்கு ஏந்திழையைக்கொடுத்தோம்
தாய்தந்தையர்செய்த தவத்தினல்வந்துதித்த
பெண்ணையுங்கூடி பிரியாமல்வைத்திருப்பீர்
அருமையுடனே ஆணழகர்வீற்றிருப்பீர்
தாய்வளர்த்தநேர்த்தி யறியாயோதார்வேந்தா
பூவளர்ந்தாற்போல வளர்ந்தாளிந்தபொற்கொடியும்
மாளிகைக்கேற்ற மணவாளர்நீதானும்
கொம்பனையாட்கேற்றாற்போல் கொற்றவரும்வந்தீர்
பழித்தோமென்றெங்கள் பட்சமுறவாதிருப்பீர்
வாழ்த்தினேமென்று மனமகிழ்ந்திருங்காண்
குற்றங்கள்பண்ணினதால் கோபிக்கவேண்டாங்காண்

சீதனச் சிறப்பு

சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
சீதனங்களுண்டுகண்டாய் சீமான்மகளாட்கு
தன்னேடேயானைகளும் தாமணியும்பொன்னுலே
பாடிக்கறக்கின்ற பாற்பசுக்கள்தானுமுண்டு

கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
நவரத்தினமிழைத்த நாற்காலிதானுமுண்டு
பாங்குபலகைகளும் பஞ்சவர்ணப் பெட்டிகளும்
வாங்குபலமணியும் வர்னவர்னச்சேலைகளும்
குத்துவிளக்குகளும் குவிந்தகளஞ்சியமும்
வைகக்கரைநாடு மாமரச்சோலைகளும்
மஞ்சளுக்குவிட்டதொரு மல்லிகைப்பூபட்டயமும்
நின்றுமிகப்பூமுடிக்கும் நிலைக்கண்ணாடியுமுண்டு
தாயார்கொடுத்ததொரு சந்தனத்தால்பெட்டியுண்டு
ஆச்சிவிளையாட அம்மான்மார்தானுமுண்டு
பேசக்கிளியும் பிடித்தாடவூஞ்சலுண்டு
தண்டிகையும்பல்லக்கு சதுரங்கசேனைகளும்
தங்கப்பதுமைகளும் தட்டுகளும்பொன்னாலே
சந்தணக்கிண்ணங்களும் தாம்பூலத்தட்டுகளும்
பெட்டியும்பேழையும் பிரியமுடன்தான்கொடுத்து
ஒன்றுங்குறையாமல் உத்தமிக்குதான்கொடுத்தோம்
மாமியார்பார்த்து மறுவார்த்தைபேசாமல்
ஓரகத்திதான்பார்த்து ஒருசொல்லுரையாமல்
மாமனார்பார்த்து மறுவார்த்தைபேசாமல்

ஈத்தினர்பார்த்து நாணுதலைச்சொல்லாமல்
நல்லோர்கள்வாழ்த்த நலம்பெறவாழ்ந்திடுவீர்

வா ழ் த் து

இந்திரன்தேவியைப்போ லெப்போதும்வாழ்த்திடுவீர்
இராமரும்சீதையும்போல் சீராகவாழ்ந்திடுவீர்
அல்லியைப்போலே அநேகநாள்வாழ்ந்திடுவீர்
மன்மதனும்ரதியும்போல் மாறாமலவாழ்ந்திடுவீர்
மகாகனமாக மனைவியுடன்வாழ்ந்திடுவீர்
குபேரனைப்போலே குறையாமல்வாழ்ந்திடுவீர்
அமராபுரியாளும் ஐயரைப்போல்வாழ்ந்திடுவீர்
மதுராபுரியாளும் மாயனைப்போல்வாழ்ந்திடுவீர்
சேனையுடையவராய் சீர்பெறவேவாழ்ந்திடுவீர்
மங்களம்பாடிமகிழவே வாழ்ந்திடுவீர்
சோபனங்கள்பாடி சுகமாகவாழ்ந்திடுவீர்.

கலியாண வாழ்த்து

முற்றிற்று.

———

லாலி

மாமேவுநவரத்னமணிமகுடநேயா
மங்களவிஜயவஜ்ரதேகா
கார்மேவுமிந்திராணிபோகா
கனகாபுரிமேவும்கனகாபிஷேகா
பூமேவும்மாதுமணவாளா
புதியநவரசகனகபூவையர்மோகா
பாமேவுபுலவர் தமிழ்க்குதவுகுணசீலா
பார்முழுதுமொருகுடைக்கீழாண்டனிர்வாகா
தேமேவுமலர்மாலை திகழும்புஜவீமா
செப்புமுத்தமிழுணர்ந்த ஜீவகுணநாதா
கோரேவுமலர்க்கணைகள் குலவுமலங்காரா
குங்குமகதம்பாத்தூரியணிதீரா
தூமேவுகலைமாது துலங்குமதிகாரா
தூயசெங்கனியான சுகுணஒய்யாரா
வாமேவுமரியயனைவலிமிகுந்தசூரா
வாகுவலயம்புனைந்த மாதவதாரா

———

மங்களம்

இராகம் - தன்யாசி, ஆதிதாளம்

மங்கையிலகுசுக மன்மதகுமாரனுக்கும்
துங்கமிகதகுந்த துரைமணவாளனுக்கும் மங்

சுந்தரமணிமார்பனுக்கும் துலங்குவஜ்ரசீலனுக்கும்
சந்திரவதனகுண சரசஒய்யாரனுக்கும்

தங்குமன்ன நடையாட்கும்
பொங்குமின்ன லிடையாட்கும் மங்களம்

மன்னர்புகழ்சீலனுக்கும் மருவியவடிவேலனுக்கும்
வன்னமிகுநயன வர்னமுள்ளசீலனுக்கும்

கண்டனைய மொழியாட்கும்
வண்டனைய விழியாட்கும் மங்களம்

பைந்தமிழ்க்குபகாரனுக்கும் பருவமுள்ளசீலனுக்கும்
சிந்தைகளிக்கவரும் ஜெயரணசூரனுக்கும்

செரிமலர்க் குழலாட்கும்
நரிமலர்க் கழலாட்கும் மங்களம்

மங்களவரசனுக்கும் மனமிகுந்தநேசனுக்கும்
கந்தகதம்பம்பூசிய கனத்ததெய்வீரனுக்கும்

கற்புடைய மாதுக்கும்
பொற்குண சாதுக்கும் மங்களம்

சொர்ப்பன சாஸ்திரம்

விலை ரூபாய் 1 - 50

[புதிய முறையில் எளிய நடையில் எழுதப் பட்டது. 224-பக்கங்கள் கொண்டது]

சொர்ப்பனங்களின் பலா பலன்களை அறிய இனி நீங்கள் எவரையும் தேடிச் செல்ல வேண்டியதில்லை. இந்த நூல் ஓர் அகராதிபோல் ,அ' விலிருந்து ஆரம்பிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. சாதாரணக் கல்வி அறிவுள்ளவர்களும் சிறிதும் கஷ்டமின்றி எவ்விதச் சொர்ப்பனத்துக்கும் பலன் தெரிந்து கொள்ளுமாறு எழுதப் பட்டிருக்கிறது.

தமிழ்ப் புத்தகங்கள் முற்றும் அடங்கிய விலை விபர ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப் படும்.

எமது விலாசம்:—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.